ஆணையிட்டுள்ளார்கள், பெண்கள் உயர் கல்வி பெறும் வண்ணம், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே விதி 110–ன்கீழ், எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் குன்னம் தொகுதியில் கலை அறிவியல் உறுப்புக் கல்லூரி தொடங்கிட ஆணையிட்ட, மாதிரி பள்ளியைத் தொடங்குவதற்கு ஆணையிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பெரம்பலூர் மாவட்ட மக்களின் சார்பிலே அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன். பெரம்பலூர் சட்டமன்ற தனி தொகுதியில் குறும்பார் பேரூராட்சியில் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பயன் பெறுகிற வகையில், அந்தப் பேரூராட்சிப் பகுதியில், கூட்டுறவு மருந்துக் கடை புதியதாகத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் அதிவிரைவிலே பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

215—

பால் குளிரூட்டும் நிலையம்

***7279—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 ஏப்ரல் 15]

கள்ளக்குறிச்சி தொகுதியில் கூடுதலாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். கள்ளக்குறிச்சி தொகுதியில் உற்பத்தி செய்யப்படும் பால் முழுவதும் சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் நயினார்பாளையம், மேல்நாரியப்பனூர், தச்சூர், சிறுவங்கூர் மற்றும் கச்சிராபாளையம் ஆகிய ஐந்து தொகுப்பு பால் குளிரூட்டும் மையங்களுக்கு அனுப்பப்பட்டு குளிர்விக்கப்படுகிறது. எனவே, கள்ளக்குறிச்சி தொகுதியில் கூடுதலாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கவேண்டிய அவசியம் தற்போது எழவில்லை. இருந்தபோதிலும், கள்ளக்குறிச்சி தொகுதியில் பால் உற்பத்தி அதிகரிக்கும்பட்சத்தில், பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பது குறித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பங்கள் நிறைந்த இந்தக் காலகட்டத்தில், மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும்விதமாக, உண்மைத் தொண்டர்களின் வேடந்தாங்கலாக ஏற்றமிகு எண்ணத்துடன் ஓய்வின்றி உழைக்கும் தமிழகத்தின் தன்னிகரில்லா தலைவி, ஒப்பற்ற தலைவி, எங்கள் குல தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, கள்ளக்குறிச்சி தொகுதிவாழ் மக்கள் பயன்பெறுகிற வகையில், சின்னசேலத்தில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட Chilling Centre இருந்தாலும்கூட, அது summer காலத்திற்குப் போதுமானதாக இருந்தாலும்கூட, குளிர்காலத்திற்குப் போதுமானதாக இல்லை. அங்கு குளிர்காலத்தில் 50 ஆயிரம் லிட்டர் பால் அதிகமாக வருவதால், குளிரூட்ட முடியாத சூழ்நிலை நிலவுகிறது. ஐந்து Mini Chilling Centres இருந்தாலும்கூட, அவையும் போதாத

சூழ்நிலைதான் அங்கு நிலவுகிறது. ஆகையால், தியாகதுருகத்தில் 20 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு Chilling Centre அமைத்துக்கொடுத்தால், பயனுள்ளதாக இருக்கும் என்பதால் இதையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதோடு, கள்ளக்குறிச்சி ஒன்றியத்தில் புக்கிரவரி, சின்னசேலம் ஒன்றியத்தில் அமகளத்தூர், தியாகதுருகம் ஒன்றியத்தில் முடியனூர், கூத்தக்குடி போன்ற கிராமங்களிலும் ஐந்தாயிரம் லிட்டர் கொள்ளளவுகொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று, நிறைவேற்றித் தந்திட வேண்டுமாய் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தொகுதியில், 73 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள்மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 50,940 லிட்டர் பால் சேகரம் செய்யப்படுகிறது. கள்ளக்குறிச்சிக்கு அருகில் உள்ள சின்னசேலத்தில் நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் குளிர்விக்கும் திறன்வாய்ந்த பால் குளிரூட்டும் நிலையம் அமைந்துள்ளது. மேலும், கள்ளக்குறிச்சி தொகுதியில் நயினார்பாளையம், மேல்நாரியப்பனூர், தச்சூர், சிறுவங்கூர் மற்றும் கச்சிராப்பாளையம் ஆகிய ஐந்து சங்கங்களில் தலா ஐந்து ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. கள்ளக்குறிச்சி தொகுதியில் உற்பத்தி செய்யப்படும் பால் முழுவதும் சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் மேற்குறிப்பிட்ட தொகுப்பு பால் குளிர்விக்கும் மையங்களுக்கு அனுப்பப்பட்டு குளிர்விக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, தியாகதுருகம் மற்றும் அவர் குறிப்பிட்ட இடங்களில், பாலினுடைய கொள்முதல் அதிகமாக இருக்கும் என்கின்ற பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, பரிசீலினை செய்து, அங்கு அமைக்கப்படும்

2013 ஏப்ரல் 15]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

216—

பயணியர் மாளிகை

***24611—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல், பார்த்திபனூர் மதகு அணையில் பயணியர் மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல், பார்த்திபனூர் மதகு அணையில் பயணியர் விடுதி கட்டும் திட்டம் இருக்கிறதா என்ற கேள்வியை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். இம்மதகு அணை தேசிய நெடுஞ்சாலை 49–லிருந்து பிரிந்து, வன்னிக்குடி மற்றும் ஏனாதிக்கோட்டை செல்லும் பஞ்சாயத்து சாலை வழியாக சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இம்மதகு அணைக்கு பயணியர் வருகை இல்லாத காரணத்தால், பயணியர் விடுதி கட்ட வேண்டிய தேவை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.